(ஒன்பதாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 81.]

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2021 யூலை 06 செவ்வாய்க்கிழமை மு.ப. 10.00 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன,** சபாநாயகர்

**கௌரவ ரன்ஜித் சியம்பலாபிடிய,** பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

**கௌரவ அங்கஜன் இராமநாதன்,** குழுக்களின் பிரதித் தவிசாளர்

---

**கௌரவ மஹிந்த ராஜபக்ஷ,** பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்

**கௌரவ ரோஹித அபேகுணவர்தன,** துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சர்

**கௌரவ மஹிந்த அமரவீர,** சுற்றாடல் அமைச்சர்

**கௌரவ டலஸ் அழகப்பெரும,** மின்சக்தி அமைச்சர்

**கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே,** கமத்தொழில் அமைச்சர்

**கௌரவ உதய கம்மன்பில,** வலுசக்தி அமைச்சர்

**கௌரவ தினேஷ் குணவர்தன,** வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் மற்றும் பாராளுமன்றச் சபை முதல்வர்

**கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,** வர்த்தக அமைச்சர்

**கௌரவ எஸ்.எம். சந்திரசேன,** காணி அமைச்சர்

**கௌரவ ஜனக பண்டார தென்னகோன்,** அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்

**கௌரவ நிமல் சிறிபால த சில்வா,** தொழில் அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரண,** பெருந்தோட்ட அமைச்சர்

**கௌரவ (பேராசிரியர்) ஜீ.எல். பீரிஸ்,** கல்வி அமைச்சர்

**கௌரவ ஜோன்ஸ்டன் பர்னாந்து,** நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசான்

**கௌரவ பிரசன்ன ரணதுங்க,** சுற்றுலாத்துறை அமைச்சர்

**கௌரவ சீ.பீ. ரத்நாயக்க,** வனசீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சர்

**கௌரவ கெஹெலிய ரம்புக்வெல்ல,** வெகுசன ஊடக அமைச்சர்

**கௌரவ சமல் ராஜபக்ஷ,** நீர்ப்பாசன அமைச்சர் மற்றும் அரச பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சர் மற்றும் உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

கௌரவ **நாமல் ராஜபக்ஷ,** இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் மற்றும் டிஜிட்டல் தொழில்நுட்பம் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

கௌரவ **காமினி லொக்குகே,** போக்குவரத்து அமைச்சர்

கௌரவ **(திருமதி) பவித்ராதேவி வன்னிஆரச்சி,** சுகாதார அமைச்சர்

கௌரவ **(கலாநிதி) சரத் வீரசேக்கர,** பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்

கௌரவ **எம். யூ. எம். அலி சப்ரி,** நீதி அமைச்சர்

கௌரவ **திலும் அமுனுகம,** வாகன ஒழுங்குறுத்துகை, பேரூந்துப் போக்குவரத்துச் சேவைகள் மற்றும் புகையிரதப் பெட்டிகள் மற்றும் மோட்டார் வாகன கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் மற்றும் சமூகப் பொலிஸ் சேவைகள் இராஜாங்க அமைச்சர்

கௌரவ **(டாக்டர்) (திருமதி) சீதா அரம்பேபொல,** திறன்கள் அபிவிருத்தி, தொழில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கல் இராஜாங்க அமைச்சர்

கௌரவ **லசந்த அலகியவன்ன,** கூட்டுறவுச் சேவைகள் சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்

கௌரவ **அஜித் நிவாட் கப்ரால்,** நிதி, மூலதனச் சந்தை மற்றும் அரச தொழில் முயற்சி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர்

கௌரவ **சிறிபால கமலத்,** மகாவலி வலயங்களை அண்டியுள்ள கால்வாய்களின் அகழிகள் மற்றும் குடியிருப்புக்கள் பொது உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர்

கௌரவ **(கலாநிதி) நாலக கொடஹேவா,** நகர அபிவிருத்தி, கரையோரப் பாதுகாப்பு, கழிவுப் பொருள் அகற்றுகை, சமுதாய தூய்மைப்படுத்தல் இராஜாங்க அமைச்சர்

கௌரவ **டி.வீ. சானக,** விமானச் சேவைகள் மற்றும் ஏற்றுமதி வலயங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

கௌரவ **சிசிர ஜயகொடி,** சுதேச வைத்திய முறைகளின் மேம்பாடு, கிராமிய மற்றும் ஆயுர்வேத வைத்தியசாலைகள் அபிவிருத்தி மற்றும் சமூக சுகாதார இராஜாங்க அமைச்சர்

கௌரவ **அநுராத ஜயரத்ன,** கிராமிய வயல் நிலங்கள் மற்றும் அண்டியுள்ள குளங்கள், நீர்த்தேக்கங்கள் மற்றும் நீர்ப்பாசன அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

கௌரவ **பியங்கர ஜயரத்ன,** வெளிநாட்டு தொழில்வாய்ப்பு மேம்பாடு மற்றும் சந்தை பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சர்

கௌரவ **தயாசிறி ஜயசேக்கர,** பத்திக், கைத்தறி துணிகள் மற்றும் உள்நாட்டு ஆடை உற்பத்தி இராஜாங்க அமைச்சர்

கௌரவ **ஜீவன் தொண்டமான்,** தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர்

கௌரவ **பியல் நிசாந்த த சில்வா,** மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, அறநெறிப் பாடசாலைகள், கல்விச் சேவைகள் மற்றும் பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர்

கௌரவ **மொஹான் பிரியதர்ஷன த சில்வா,** சேதன மற்றும் இயற்கை பசளை உற்பத்தி, விநியோகங்கள் மற்றும் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சர்

கௌரவ **துமிந்த திசாநாயக்க,** சூரிய சக்தி, காற்று மற்றும் நீர் மின்னுற்பத்தி கருத்திட்ட இராஜாங்க அமைச்சர்

**கௌரவ விமலவீர திசாநாயக்க,** வனசீவராசிகள் பாதுகாப்பு, யானை வேலிகள் மற்றும் அகழிகளை அமைத்தல் உள்ளிட்ட பாதுகாப்பு வேலைத்திட்டங்கள் மற்றும் காடுகளை மீண்டும் வளர்த்தல் மற்றும் வனவளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சனத் நிசாந்த,** கிராமிய மற்றும் பிரதேச குடிநீர் வழங்கல் கருத்திட்டங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அருந்திக்க பர்னாந்து,** தென்னை, கித்துல் மற்றும் பனை செய்கைகள் மேம்பாடு மற்றும் அவை சார்ந்த கைத்தொழில் பண்டங்கள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே,** ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கொவிட் நோய்க் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சுசில் பிரேமஜயந்த,** கல்விச் சீர்திருத்தங்கள், திறந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் தொலைக்கல்வி மேம்பாடு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ தாரக்க பாலசூரிய,** பிராந்திய உறவு நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ விஜித பேருகொட,** அறநெறிப் பாடசாலைகள், பிரிவெனாக்கள் மற்றும் பிக்குமார் கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பிரசன்ன ரணவீர,** பிரம்புகள், பித்தளை, மட்பாண்டங்கள், மரப்பொருட்கள் மற்றும் கிராமிய கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லொஹான் ரத்வத்தே,** இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணங்கள் சார்ந்த கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் மற்றும் சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வளிப்பு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சஷீந்திர ராஜபக்ஷ,** நெல் மற்றும் தானியவகைகள், சேதன உணவுகள், மரக்கறிகள், பழ வகைகள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு செய்கை மேம்பாட்டு, விதை உற்பத்தி மற்றும் உயர் தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர்

**கௌரவ நிமல் லான்சா,** கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஜானக வக்கும்புர,** கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கறுவா, கராம்பு, வெற்றிலை உள்ளிட்ட சிறு பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை அபிவிருத்தி மற்றும் அதுசார்ந்த கைத்தொழில்கள் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ விதுர விக்ரமநாயக,** தேசிய மரபுரிமைகள், அரங்குக் கலைகள் மற்றும் கிராமியக் கலைகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ கஞ்சன விஜேசேகர,** அலங்கார மீன்கள், நன்னீர் மீன்கள், இறால்களை வளர்த்தல், கடற்றொழில் துறைமுகங்கள் அபிவிருத்தி, பல நாள் கடற்றொழில் அலுவல்கள் மற்றும் மீன் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ தேனுக விதானகமகே,** கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ச. வியாழேந்திரன்,** பின்தங்கிய கிராம பிரதேச அபிவிருத்தி, வீட்டு விலங்கின வளர்ப்பு மற்றும் சிறுபொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஜயந்த சமரவீர,** களஞ்சிய வசதிகள், கொள்கலன் முனையங்கள், துறைமுக வழங்கல் வசதிகள், இயந்திரப் படகுகள் மற்றும் கப்பற் தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ செஹான் சேமசிங்க,** சமுர்த்தி, வதிவிடப் பொருளாதார, நுண்நிதிய, சுயதொழில் மற்றும் தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ இந்திக அனுருத்த ஹேரத்,** கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை மற்றும் கட்டிடப் பொருட் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ கனக ஹேரத்,** கம்பனித் தோட்டங்களைச் சீர்திருத்துதல், தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்கள் சார்ந்த பயிர்ச்செய்கை, தேயிலைத் தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்துதல் மற்றும் தேயிலை மற்றும் இறப்பர் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ டீ. பி. ஹேரத்,** கால்நடை வளங்கள், பண்ணைகள் மேம்பாடு, பால் மற்றும் முட்டை சார்ந்த கைத்தொழில்கள் இராஜாங்க அமைச்சர்

---

**கௌரவ செல்வம் அடைக்கலநாதன்**

**கௌரவ அமரகீர்த்தி அதுகோரள**

**கௌரவ கபில அதுகோரல**

**கௌரவ (திருமதி) தலதா அதுகோரல**

**கௌரவ சம்பத் அதுகோரல**

**கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க**

**கௌரவ ஹெக்டர் அப்புஹாமி**

**கௌரவ அஸோக அபேசிங்ஹ**

**கௌரவ (கலாநிதி) (திருமதி) ஹரினி அமரசூரிய**

**கௌரவ துஷார இந்துனில் அமரசேன**

**கௌரவ மாயாதுன்ன சிந்தக அமல்**

**கௌரவ தவராஜா கலை அரசன்**

**கௌரவ ஜே.சீ. அலவத்துவல**

**கௌரவ டிரான் அலஸ்**

**கௌரவ நஸீர் அஹமட்**

**கௌரவ திஸகுட்டி ஆரச்சி**

**கௌரவ எம். உதயகுமார்**

**கௌரவ யூ.கே. சுமித் உடுகும்புர**

**கௌரவ (மேஜர்) பிரதீப் உந்துகொட**

**கௌரவ சஞ்ஜீவ எதிரிமான்ன**

**கௌரவ அகில எல்லாவல**

**கௌரவ லலித் எல்லாவல**

**கௌரவ செல்வராசா கஜேந்திரன்**

**கௌரவ கோவிந்தன் கருணாகரம்**

கௌரவ கயந்த கருணாதிலக்க

கௌரவ சாகர காரியவசம்

கௌரவ பைஸால் காசிம்

கௌரவ ஜயந்த கெட்டகொட

கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல

கௌரவ உதயன கிரிந்திகொட

கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி

கௌரவ கெவிந்து குமாரதுங்க

கௌரவ கே.பி.எஸ். குமாரசிறி

கௌரவ அ. அரவிந்த் குமார்

கௌரவ வேலு குமார்

கௌரவ கருணாதாஸ கொடிதுவக்கு

கௌரவ நாலக பண்டார கோட்டேகொட

கௌரவ மனோ கணேசன்

கௌரவ (திருமதி) டயனா கமகே

கௌரவ (டாக்டர்) உபுல் கலப்பத்தி

கௌரவ உதயகாந்த குணதிலக்க

கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன

கௌரவ யதாமிணீ குணவர்தன

கௌரவ சிவநேசதுரை சந்திரகாந்தன்

கௌரவ மிலான் ஜயதிலக்க

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன

கௌரவ பிரேமலால் ஜயசேக்கர

கௌரவ குலசிங்கம் திலீபன்

கௌரவ பிரமித்த பண்டார தென்னகோன்

கௌரவ எம். எஸ். தௌபீக்

கௌரவ ஷான் விஜயலால் த சில்வா

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா

கௌரவ சாமர சம்பத் தசனாயக

கௌரவ அநுர திசாநாயக்க

கௌரவ எஸ். பீ. திசாநாயக்க

கௌரவ (திருமதி) மஞ்சுலா திசாநாயக

கௌரவ மயந்த திசாநாயக்க

கௌரவ றோஹண திஸாநாயக்க

கௌரவ சாரதீ துஷ்மந்த

**கௌரவ (மேஜர்) சுதர்ஷன தெனிபிடிய**

**கௌரவ இசுரு தொடன்கொட**

**கௌரவ பிரேம்நாத் சி. தொலவத்த**

**கௌரவ டப்ளியூ.எச்.எம். தர்மசேன**

**கௌரவ எச். நந்தசேன**

**கௌரவ கயாஷான் நவனந்த**

**கௌரவ அசங்க நவரத்ன**

**கௌரவ மனுஷ நாணாயக்கார**

**கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்**

**கௌரவ கிங்ஸ் நெல்சன்**

**கௌரவ சு. நோகராதலிங்கம்**

**கௌரவ புத்திக பத்திறண**

**கௌரவ அனுப பஸ்குவல்**

**கௌரவ நிமல் பியதிஸ்ஸ**

**கௌரவ ஜகத் புஷ்பகுமார**

**கௌரவ டிலான் பெரேரா**

**கௌரவ நிரோஷன் பெரேரா**

**கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா**

**கௌரவ ஜீ.ஜீ. பொன்னம்பலம்**

**கௌரவ நலின் பிரனாந்து**

**கௌரவ அசோக்க பிரியந்த**

**கௌரவ (திருமதி) முதிதா பிரிஸான்தி**

**கௌரவ சஜித் பிரேமதாச,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

**கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார**

**கௌரவ (பேராசிரியர்) ரஞ்சித் பண்டார**

**கௌரவ ரோஹண பண்டார**

**கௌரவ சாந்த பண்டார**

**கௌரவ றிஸாட் பதியுதீன்**

**கௌரவ சுதத் மஞ்சுல**

**கௌரவ எஸ்.எம். மரிக்கார்**

**கௌரவ கே. காதர் மஸ்தான்**

**கௌரவ இம்ரான் மஹ்ரூப்**

**கௌரவ இம்தியாஸ் பாகிர் மாகார்**

**கௌரவ அஜித் மான்னப்பெரும**

**கௌரவ எஸ். எம். எம். முஸ்ஸாரப்**

**கௌரவ மொஹமட் முஸம்மில்**

கௌரவ அநுர பிரியதர்ஷன யாபா

கௌரவ வசந்த யாப்பாபண்டார

கௌரவ பாட்டளி சம்பிக ரணவக்க

கௌரவ நிபுண ரணவக

கௌரவ பீ.வை.ஜீ. ரத்னசேக்கர

கௌரவ (வண.) அதுரலியே ரதன தேரர்

கௌரவ குமாரசிறி ரத்னாயக்க

கௌரவ அலி சப்ரி ரஹீம்

கௌரவ இஷாக் ரஹுமான்

கௌரவ முஜிபுர் ரஹுமான்

கௌரவ (கலாநிதி) சுரேன் ராகவன்

கௌரவ ஹர்ஷண ராஜகருணா

கௌரவ அஜித் ராஜபக்ஷ

கௌரவ குணதிலக ராஜபக்ஷ

கௌரவ (டாக்டர்) திலக் ராஜபக்ஷ

கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ

கௌரவ (கலாநிதி) வீ. இராதாகிருஷ்ணன்

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்

கௌரவ வருண லியனகே

கௌரவ இரான் விக்கிரமரத்ன

கௌரவ ரணில் விக்கிரமசிங்க

கௌரவ (திருமதி) ராஜிகா விக்கிரமசிங்ஹ

கௌரவ க.வி. விக்னேஸ்வரன்

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன

கௌரவ சமிந்த விஜேசிறி

கௌரவ எம். டப்ளியு. டீ. சஹன் பிரதீப் விதான

கௌரவ மதுர விதானகே

கௌரவ ஹேஷா விதானகே

கௌரவ (பேராசிரியர்) திஸ்ஸ விதாரண

கௌரவ சந்திம வீரக்கொடி

கௌரவ (சனாதிபதி சட்டத்தரணி) ஜயந்த வீரசிங்க

கௌரவ டீ. வீரசிங்க

கௌரவ வீரசுமன வீரசிங்ஹ

கௌரவ திலிப் வெதஆரச்சி

கௌரவ குமார வெல்கம

கௌரவ சிவஞானம் சிறீதரன்

**கௌரவ ராஜவரோதயம் சம்பந்தன்**

**கௌரவ மைத்ரீபால சிறிசேன**

**கௌரவ எம்.ஏ. சுமந்திரன்**

**கௌரவ வடிவேல் சுரேஷ்**

**கௌரவ ஜோன் செனவிரத்ன**

**கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன**

**கௌரவ ரஊப் ஹகீம்**

**கௌரவ அப்துல் ஹலீம்**

**கௌரவ கபீர் ஹஷீம்**

**கௌரவ எச்.எம்.எம். ஹரீஸ்**

**கௌரவ (பேராசிரியர்) சரித்த ஹேரத்**

**கௌரவ ஜயரத்ன ஹேரத்**

**கௌரவ விஜித ஹேரத்**

**கௌரவ சமன்பிரிய ஹேரத்**

**கௌரவ மர்ஜான் பளீல்**

**கௌரவ பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா**

திரு. தம்மிக தசநாயக்க, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திருமதி குஷானி ரோஹனதீர, பணியாட்டொகுதிப் பிரதானியும் பிரதிப் பாராளுமன்றச் செயலாளர் நாயகமும்

திரு. டிக்கிரி கே. ஜயதிலக, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

1. ***சபாநாயகரின் அறிவித்தல்கள்***: சபாநாயகர் பின்வருமாறு அறிவித்தல்கள் விடுத்தார்:—

**I**

“அரசியலமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் உயர் நீதிமன்றத்தில் கேள்விக்குட்படுத்தப்பட்ட ‘கொரோனா வைரஸ் தொற்று 2019 (கொவிட்-19) (தற்காலிக ஏற்பாடுகள்)’ என்று தலைப்பிடப்பட்ட சட்டமூலம் தொடர்பான உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு எனக்கு கிடைத்துள்ளது என்பதை நான் அறிவிக்க விரும்புகிறேன்.

குறித்த விடயம் மீது நீதிபதிகள் மூவரைக் கொண்ட நீதிபதிகளின் குழாம் ஒன்றினால் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளதுடன் இரண்டு நீதிபதிகள் பின்வருமாறு தீர்ப்பளித்துள்ளார்கள்:-

குறித்த சட்டமூலத்தின் 12 ஆம் வாசகத்தில் உள்ள ‘கொவிட்-19 சூழ்நிலை’ என்பதன் வரைவிலக்கணத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் குறித்த சட்டமூலத்தின் 2,3,4,6,7 மற்றும் 10 ஆம் வாசகங்கள் அரசியலமைப்பின் 3 மற்றும் 4(இ) என்ற உறுப்புரைகளுடன் ஒவ்வாதுள்ளதுடன் அரசியலமைப்பின் 84(2) ஆம் உறுப்புரையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விசேட பெரும்பான்மையினால் மாத்திரமே செல்லத்தக்கதாக நிறைவேற்றப்பட்டு மக்களால் மக்கள் தீர்ப்பொன்றில் அங்கீகரிக்கப்படலாம்;

எனினும், நீதிமன்றத்தால் கருத்துத் தெரிவிக்கப்பட்டவாறு 12 ஆம் வாசகத்தில் உள்ள 'கொவிட்-19 சூழ்நிலை' என்பதன் வரைவிலக்கணம் திருத்தப்பட்டால் ஒவ்வாமை இல்லாதொழியும் என்பதுடன் சட்டமூலம் ஒரு எளிய பெரும்பான்மையுடன் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படலாம்.

குறித்த சட்டமூலத்தின் 4 ஆம் வாசகம் அரசியலமைப்பின் 4(இ) என்ற உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 136 ஆம் உறுப்புரையுடன் ஒவ்வாதுள்ளது என்பதுடன் அரசியலமைப்பின் 84(2) ஆம் உறுப்புரையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விசேட பெரும்பான்மையின் மூலம் மாத்திரமே செல்லத்தக்கதாக நிறைவேற்றப்படலாம்.

உயர் நீதிமன்றத்துக்கு வழங்கப்பட்ட உத்தேச திருத்தத்தின் பிரகாரம் திருத்தப்பட்டால் மேற்படி வாசகத்தின் ஒவ்வாமை இல்லாதொழியும் என்பதுடன் சட்டமூலம் ஒரு எளிய பெரும்பான்மையுடன் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படலாம்.

அரசியலமைப்பின் 12(1) ஆம் உறுப்புரையுடன் குறித்த சட்டமூலத்தின் 5,6 மற்றும் 7 ஆம் வாசகங்கள் ஒவ்வாதுள்ளன என்பதுடன் அரசியலமைப்பின் 84(2) ஆம் உறுப்புரையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விசேட பெரும்பான்மையின் மூலம் மாத்திரமே செல்லத்தக்கதாக நிறைவேற்றப்படலாம்.

குறித்த சட்டமூலத்தின் ஏனைய ஏற்பாடுகள் அரசியலமைப்புடன் முரண்படவில்லை என்பதுடன் ஒரு எளிய பெரும்பான்மையுடன் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படலாம். எனினும், குறித்த சட்ட மூலத்தின் 3(1) ஆம் வாசகம் தொடர்பாக உயர் நீதிமன்றத்தால் கருத்துத் தெரிவிக்கப்பட்டவாறு ஒரு ஏற்பாட்டைச் செய்யலாம்.

அடுத்த நீதிபதியின் தீர்மானம் பின்வருமாறு:-

குறித்த சட்டமூலத்தின் 12 ஆம் வாசகத்தில் உள்ள 'கொவிட்-19 சூழ்நிலை' என்பதன் வரைவிலக்கணத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் குறித்த சட்டமூலத்தின் 2,3,4,6,7,8,9 மற்றும் 10 ஆம் வாசகங்கள் அரசியலமைப்பின் 3 மற்றும் 4(இ) என்ற உறுப்புரைகளுடன் ஒத்துச் செல்கிறன என்பதுடன் ஒரு எளிய பெரும்பான்மையுடன் பாராளுமன்றத்தில் செல்லத்தக்கதாக நிறைவேற்றப்படலாம்;

உப வாசகம் (ஆ) என்பது உப வாசகம் (இ) என்பதன் ஓர் உதாரணம் என்ற காரணத்தால் 'கொவிட்-19 சூழ்நிலை' என்பதன் வரைவிலக்கணம் எவ்வாறென்றாலும் திருத்தப்படலாம்.

குறித்த சட்டமூலத்தின் 4 ஆம் வாசகம் அரசியலமைப்பின் 4(இ) என்ற உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 136 ஆம் உறுப்புரையுடன் ஒவ்வாதுள்ளது என்பதுடன் அரசியலமைப்பின் 84(2) ஆம் உறுப்புரையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விசேட பெரும்பான்மையின் மூலம் மாத்திரமே செல்லத்தக்கதாக நிறைவேற்றப்படலாம் என்பதுடன் உயர் நீதிமன்றத்துக்கு வழங்கப்பட்ட முன்மொழியப்பட்ட திருத்தத்தின் பிரகாரம் திருத்தப்பட்டால் மேற்படி வாசகத்தின் ஒவ்வாமை இல்லாதொழியும் என்பதுடன் சட்டமூலம் ஒரு எளிய பெரும்பான்மையுடன் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படலாம்.

அரசியலமைப்பின் 12(1) ஆம் உறுப்புரையுடன் குறித்த சட்டமூலத்தின் 5,6,7 மற்றும் 8 ஆம் வாசகங்கள் ஒத்துச் செல்கின்றன என்பதுடன் ஒரு எளிய பெரும்பான்மையுடன் பாராளுமன்றத்தில் செல்லத்தக்கதாக நிறைவேற்றப்படலாம்.

குறித்த சட்டமூலத்தின் ஏனைய ஏற்பாடுகள் அரசியலமைப்புடன் முரண்படவில்லை என்பதுடன் ஒரு எளிய பெரும்பான்மையுடன் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படலாம்.

உயர் நீதிமன்றத்தின் இந்தத் தீர்மானம் இன்றைய பாராளுமன்ற அமர்வு நடவடிக்கைகளின் உத்தியோகபூர்வ அறிக்கையில் அச்சிடப்பட வேண்டும் என்று நான் கட்டளையிடுகிறேன்.''

**II**

“இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 79 ஆம் உறுப்புரையின் பிரகாரம் ‘இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனம் (திருத்தம்)’ எனும் சட்டமூலத்தில், 2021 யூன் 30 ஆம் திகதி என்னால் சான்றுரை எழுதப்பட்டதென்பதை அறிவிக்க விரும்புகிறேன்.”

**2. பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படல்:** (1) நெடுஞ்சாலைகள் அமைச்சர், 2017 ஆம் ஆண்டுக்கான தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் வருடாந்த அறிக்கையை சமர்ப்பித்து அவ்வறிக்கை நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(2) நெடுஞ்சாலைகள் அமைச்சர்—

(i) 2020 ஆம் ஆண்டுகளுக்கான கொம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்தின் நிதிச் செயலாற்றுகைக் கூற்று;

(ii) 2020 ஆம் ஆண்டுக்கான வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கை;

(iii) 2020 ஆம் ஆண்டுக்கான தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை;

(iv) 2020 ஆம் ஆண்டுக்கான முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கை;

(v) 2020 ஆம் ஆண்டுக்கான தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கை;

(vi) 2020 ஆம் ஆண்டுக்கான தகவல் தொழினுட்ப முகாமைத்துவத் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கை;

(vii) 2020 ஆம் ஆண்டுக்கான நகர அபிவிருத்தி, கடலோரப் பாதுகாப்பு, கழிவுப்பொருள் வெளியேற்றம் மற்றும் தும்புரவு ஏற்பாட்டு நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சின் செயலாற்றுகை அறிக்கை; மற்றும்

(viii) 2020 ஆம் ஆண்டுக்கான நிதி அமைச்சின் செயலாற்றுகை அறிக்கை

ஆகியவற்றைச் சமர்ப்பித்தார்.

அவ்வறிக்கைகள் **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(3) பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக நெடுஞ்சாலைகள் அமைச்சர், 2020 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 6(1) ஆம் பிரிவின் கீழ் 2021.05.01 முதல் 2021.06.21 வரையுள்ளவாறு தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தின் செலவினத் தலைப்பு இலக்கம் 240 இன் கீழ் குறைநிரப்பு உதவிச் சேவைகள் மற்றும் அவசர தேவைப்பாடுகள் பொறுப்புக் கருத்திட்டத்தின் மூலம் செய்யப்பட்ட குறைநிரப்பு ஒதுக்கீடுகள் தொடர்பான குறிப்பைச் சமர்ப்பித்தார்.

அப்பத்திரம் **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(4) நெடுஞ்சாலைகள் அமைச்சர்—

(i) 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3(4) ஆம் பிரிவின் கீழ் வெல்கம் ஹோட்டல்ஸ் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட் தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2021 மே 24 ஆம் திகதிய 2229/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை; மற்றும்

(ii) 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3(4) ஆம் பிரிவின் கீழ் எவிக் இன்டர்நெஷனல் ஹொட்டேல்ஸ் லங்கா லிமிட்டெட் தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2021 மே 24 ஆம் திகதிய 2229/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை

ஆகியவற்றைச் சமர்ப்பித்து அக்கட்டளைகளை அரசாங்க நிதி பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(5) கல்வி அமைச்சர், 2020 ஆம் ஆண்டுக்கான மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, கல்விச் சேவைகள் மற்றும் பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையினைச் சமர்ப்பித்தார்.

அவ்வறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(6) அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர், 2020 ஆம் ஆண்டுக்கான அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையினையும் கணக்குகளையும் சமர்ப்பித்தார்.

அவ்வறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(7) நெடுஞ்சாலைகள் அமைச்சர், 2020 ஆம் ஆண்டுக்கான அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

அவ்வறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று

(8) நெடுஞ்சாலைகள் அமைச்சர், 2017 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்கான தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபையின் ஆண்டறிக்கைகளைச் சமர்ப்பித்து அவ்வறிக்கைகளை கைத்தொழில் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(9) நீதி அமைச்சர், 2019 ஆம் ஆண்டுக்கான மீயுயர் நீதிமன்றங்களின் கட்டிடத் தொகுதி முகாமை சபையின் வருடாந்த அறிக்கையினைச் சமர்ப்பித்து அவ்வறிக்கையை நீதி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**3. குழுக்களின் அறிக்கைகள் சமர்ப்பித்தல்**: நீதி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவின் தவிசாளர் கௌரவ எம். யூ. எம். அலி சப்ரி அக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட —

(i) 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறை சட்டக்கோவை (திருத்தம்) சட்டமூலம்;

(ii) 1994 ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க சித்திரவதை மற்றும் வேறு கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது கீழ்த்தரமாக நடத்துதல் அல்லது தண்டித்தல் என்பவற்றுக்கெதிரான சமவாயம் (திருத்தம்) சட்டமூலம்;

(iii) 2013 ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை(விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 7(2) பிரிவின் கீழ் நீதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2020 திசெம்பர் 23 ஆம் திகதிய 2207/6 இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளைகள்;

(iv) 2017 ஆம் ஆண்டுக்கான மீயுயர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதி முகாமைச் சபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்காய்வுக்குட்பட்ட கணக்குகள்;

(v) 2018 ஆம் ஆண்டுக்கான மீயுயர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதி முகாமைச் சபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்காய்வுக்குட்பட்ட கணக்குகள்;

(vi) 2016 ஆம் ஆண்டுக்கான இலங்கை நீதிபதிகள் நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை; மற்றும்

(vii) 2016 ஆம் ஆண்டுக்கான ஆட்கள், ஆதனங்கள் மற்றும் கைத்தொழில்கள் புனரமைப்பு அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள்

தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

**4. பொது மனுக்கள் சமர்ப்பித்தல்:**

(1) திஹாரிய, வாரண வீதி, "சிறி நிவஸ" எனும் முகவரியில் வதியும் திரு. எல்.ஏ.யூ.யூ. வீரசிங்கவினது 2020.07.27 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க சமர்ப்பித்தார்.

(2) (i) தங்காலை, கொடெல்லவெல, லிந்தகாவத்த எனும் முகவரியில் வதியும் திரு. ஏ.எச். பிரேமசிரியினது 2021.03.09 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(ii) கம்பஹா, வீர கெப்பெட்டிபொல மாவத்தை, பண்டாரவத்த, பண்டாரவத்த எஸ்டேட், இல. 63/ஏ/73 இல் வதியும் திரு. எச்.ஏ.எஸ். ஹெட்டிஆரச்சியினது 2021.03.15 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(iii) மல்வான, வல்கம, இல. 336/ஏ, எனும் முகவரியில் வதியும் திருமதி எல்.ஏ. சந்திரிகா அத்துகோரள மற்றும் ஏனையோரினதும் 2021.03.29 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்; மற்றும்

(iv) ஹற்றன், பூங்கா வீதி, ஹற்றன் டிக்கோயா நகர சபை, இல. 09 இல் வதியும் திரு. ஆர்.ஆர்.எஸ். மெதவெலவினது 2021.03.19 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ விஜித ஹேரத் சமர்ப்பித்தார்.

(3) கட்டுவன, ஆனத்தகொட, தங்கஹவத்த, இல. 180/03 இல் வதியும் திரு. ஜானக தொன் பட்டகொடவினது 2021.03.25 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ அமரகீர்த்தி அத்துகோரள சமர்ப்பித்தார்.

(4) தன்துரே, வெவேவத்த, இல. 442 இல் வதியும் திரு. டப்ளியூ.ஜி. சமரசிங்கவினது 2021.03.12 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ வஸந்த யாபாபண்டார சமர்ப்பித்தார்.

மேற்படி மனுக்கள் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 30(10) இன் கீழ் பொது மனுக்கள் பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

**5. சமுகமளிக்காதிருப்பதற்கு அனுமதிகோரும் பிரேரணைகள்:** பாராளுமன்ற சபை முதல்வர் சமர்ப்பித்த பிரேரணை,— அரசியலமைப்பின் 66 (ஊ) உறுப்புரையின் கீழ், களுத்துறை தேர்தல் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ மஹிந்த சமரசிங்ஹ அவர்களுக்கு 2021 யூன் 23 ஆம் திகதி முதல் மூன்று மாதங்களுக்கு பாராளுமன்ற அமர்வுகளுக்குச் சமுகமளிக்காதிருப்பதற்கு அனுமதி கோரும் பிரேரணையை சமர்ப்பித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**6. சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல. 1 ) :** "இலங்கை மருந்தியல் சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்" எனும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக என கௌரவ மதுர விதானகே பிரேரித்தார். கௌரவ (திருமதி) முதிதா பிரிஸான்தி அனுவதித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதற்கமையச் சட்டமூலம் முதலாவது முறையாக மதிப்பிடப்பெற்று அச்சிடப்பட வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

52(6) ஆம் இலக்க நிலையியற் கட்டளைக்கமைய அறிக்கையிடுவதற்காக சட்டமூலம் சுகாதார அமைச்சரின் கவனத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.

**7. குற்றவியல் நடவடிக்கைமுறை சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம்:** இரண்டாம் மதிப்பீட்டுக்கான கட்டளை வாசிக்கப்பட்டது.

"இச்சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் மதிப்பீடு செய்யப்படுமாக" என நீதி அமைச்சர் பிரேரித்தார்.

(பி.ப. 12.33 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

"கௌரவ சஞ்ஜீவ எதிரிமான்ன தலைமை தாங்குவாராக" என பெருந்தோட்ட அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப.12.43 மணிக்கு கௌரவ சஞ்ஜீவ எதிரிமான்ன தலைமை தாங்கினார்.)

(பி.ப.1.31 மணிக்கு குழுக்களின் பிரதித் தவிசாளர் தலைமை தாங்கினார்.)

"கௌரவ இசுரு தொடன்கொட தலைமை தாங்குவாராக" என பத்திக், கைத்தறி துணிகள் மற்றும் உள்நாட்டு ஆடை உற்பத்தி இராஜாங்க அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப.2.21 மணிக்கு கௌரவ இசுரு தொடன்கொட தலைமை தாங்கினார்.)

"கௌரவ சமன்பிரிய ஹேரத் தலைமை தாங்குவாராக" என கௌரவ நிமல் பியதிஸ்ஸ முன்மொழிந்தார். அதனை கௌரவ (திருமதி) மஞ்சுலா திசாநாயக வழிமொழிந்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப 3.15 மணிக்கு கௌரவ சமன்பிரிய ஹேரத் தலைமை தாங்கினார்.)

(பி.ப 4.22 மணிக்கு சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

சட்டமூலம் அதற்கமைய இரண்டாவது முறையாக மதிப்பிடப்பட்டது.

"சட்டமூலம் முழுப்பாரளுமன்ற குழுவின் பரிசீலனைக்கு விடப்படுமாக" என நீதி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உடனே பாராளுமன்றம் குழுவாக மாறியது.

(குழுநிலையில்)

சபாநாயகர் தலைமை தாங்கினார்.

1 ஆம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

வாசகம் 2

சட்டமூலத்தின் சிங்களப் பிரதியில் 1 ஆம் பக்கத்தில் 9 ஆம் வரியை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு கௌரவ முஜிபுர் ரஹுமான் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"43 (ආ) (1) පොලිස් ස්ථානවල, ත්‍රස්තවාදී විමර්ශන අංශයේ, අපරාධ පරීක්ෂණ දෙපාර්තමේන්තුව සහ අනෙකුත් රැඳවුම් මධ්‍යස්ථානවල අත්අඩංගුවේ "

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு நிராகரிக்கப்பட்டது.

சட்டமூலத்தின் சிங்களப் பிரதியில் 1 ஆம் பக்கத்தில் 17 ஆம் வரியை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு கௌரவ முஜிபுர் ரஹுமான் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"පිහිටා ඇති සෑම පොලිස් ස්ථානයකට ම, ත්‍රස්තවාදී විමර්ශන අංශය, අපරාධ පරීක්ෂණ දෙපාර්තමේන්තුව සහ අනෙකුත් රැඳවුම් මධ්‍යස්ථානයකට ම යටත්"

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு நிராகரிக்கப்பட்டது.

சட்டமூலத்தின் சிங்களப் பிரதியில் 1 ஆம் பக்கத்தில் 20 மற்றும் 21 ஆம் வரிகளை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு கௌரவ முஜிபுர் ரஹுமான் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"(2) (1) වන උපවගන්තියේ කාර්යය සඳහා, පොලිස් ස්ථානය හෝ රැඳවුම් මධ්‍යස්ථානය වෙත පැමිණෙන මහේස්ත්‍රාත්වරයා විසින් -"

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு நிராகரிக்கப்பட்டது.

சட்டமூலத்தின் சிங்களப் பிரதியில் 1 ஆம் பக்கத்தில் 24 ஆம் வரியை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு கௌரவ முஜிபுர் ரஹுமான் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"එම සැකකරු එම පොලිස් ස්ථානයේ හෝ රැඳවුම් මධ්‍යස්ථානයේ "

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு நிராகரிக்கப்பட்டது.

"வாசகம் சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

3 ஆம் வாசகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமாக்கு வாசகமும் சட்டப்பெயரும்:

சட்டமாக்கு வாசகமும் சட்டப்பெயரும் சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்று பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமூலம் திருத்தங்களின்றி ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

“சட்டமூலம் இப்பொழுது மூன்றாவது முறையாக மதிப்பிடப் பெறுமாக” என நீதி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதற்கமைய சட்டமூலம் மூன்றாம் முறையாக மதிப்பிடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

**8. சித்திரவதை மற்றும் வேறு கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது கீழ்த்தரமாக நடத்துதல் அல்லது தண்டித்தல் என்பவற்றுக்கெதிரான சமவாயம் (திருத்தச்) சட்டமூலம் :** இரண்டாம் மதிப்பீட்டுக்கான கட்டளை வாசிக்கப்பட்டது.

“இச்சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் மதிப்பீடு செய்யப்படுமாக” என நீதி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமூலம் அதற்கமைய இரண்டாவது முறையாக மதிப்பிடப்பட்டது.

“சட்டமூலம் முழுப்பாராளுமன்ற குழுவின் பரிசீலனைக்கு விடப்படுமாக” என நீதி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உடனே பாராளுமன்றம் குழுவாக மாறியது.

(குழுநிலையில்)

சபாநாயகர் தலைமை தாங்கினார்.

1 முதல் 3 வரையிலான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

சட்டமாக்கு வாசகமும் சட்டப்பெயரும்:

சட்டமாக்கு வாசகமும் சட்டப்பெயரும் சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்று பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமூலம் திருத்தங்களின்றி ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

“சட்டமூலம் இப்பொழுது மூன்றாவது முறையாக மதிப்பிடப் பெறுமாக” என நீதி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதற்கமைய சட்டமூலம் மூன்றாம் முறையாக மதிப்பிடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

**9. குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை:** நீதி அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,— 2013 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை ( விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 7 ( 2 ) ஆம் பிரிவின் கீழ் நீதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2020 திசெம்பர் 23 ஆம் திகதிய 2207/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.03.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**10. காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் உறுப்பினர்களுக்கான சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை திருத்தம் செய்தல்:** நீதி அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,— 2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (தாபித்தலும், நிருவகித்தலும் மற்றும் பணிகளை நிறைவேற்றுதலும்) சட்டத்தின் II ஆம் பகுதியின் 10(1) பிரிவின் மூலம் காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்துக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்கள் மற்றும் பணிகளை நிறைவேற்றுவதற்காக மேற்படி ஏற்பாடுகளின் கீழ் தாபிக்கப்பட்டுள்ளதுடன். மேற்படி சட்டத்தின் 4(1) மற்றும் 6 ஆம் பிரிவினால் உறுப்பினர்கள் 07 பேர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள் என்பதுடன், அதன் உறுப்பினர் ஒருவர் அவ் அலுவலகத்தின் தவிசாளராக நியமனம் செய்யப்பட்டுள்ளதனாலும்;

மேற்படி அலுவலர்களுக்கு 2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சட்டத்தின் 20 ஆம் பிரிவுக்கு அமைய பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுகின்ற சம்பளத்தை செலுத்துவதற்கு மற்றும் அதனை திரட்டிய நிதியத்திற்கு பொறுப்பிக்கப்படுதல் வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளதனாலும்;

18/0689/705/001 ஆம் இலக்க மற்றும் 2018.06.05 ஆம் திகதிய திருத்திய அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் வழங்கப்பட்ட அங்கீகாரம் மற்றும் 2018.09.04 ஆம் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பிரேரணையின் அடிப்படையில் காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் தவிசாளருக்கு ரூபா 100,000/- ஆன மாதாந்தக் கொடுப்பனவும், மாதாந்தத் தொலைபேசிக் கொடுப்பனவாக ரூபா 10,000/- உம் மற்றும் மாதாந்த எரிபொருள் கொடுப்பனவாக லீற்றர் 225 இற்கும், மேற்படி அலுவலகத்தின் உறுப்பினர்களுக்கு 75,000/- ஆன மாதாந்தக் கொடுப்பனவும், மாதாந்தத் தொலைபேசிக் கொடுப்பனவாக ரூபா 8,000/- உம் மற்றும் வீட்டிலிருந்து அலுவலகத்திற்கு

உள்ள தூரத்தின் அடிப்படையில் 350 கி.மீ. வரை ரூ. 25,000/- அல்லது கி.மி. 350 அல்லது அதற்கு மேற்பட்ட தூரத்திற்கு ரூபா 50,000/- ஆன மாதாந்தப் போக்குவரத்துக் கொடுப்பனவிற்கும் உரித்துப் பெறுவதனாலும்;

நீதி அமைச்சின் கீழுள்ள இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தின் உறுப்பினர்களுக்கு சம்பளத்தை தீர்மானிப்பது பாராளுமன்றமாகும் என்பதுடன், 2019.09.20 ஆம் திகதி நிறைவேற்றிக் கொள்ளப்பட்ட பிரேரணைக்கு அமைய மேற்படி அலுவலர்களின் சம்பளம் திருத்தம் செய்யப்பட்டு அதிகரிக்கப்பட்டுள்ளதனாலும்;

காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் தவிசாளர் உள்ளிட்ட உறுப்பினர்களுக்கும் 2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் ( தாபித்தலும், நிருவகித்தலும் மற்றும் பணிகளை நிறைவேற்றுதலும்) சட்டத்தின் 20 ஆம் பிரிவுக்கு அமைய 2020.11.30 ஆம் திகதி முதல் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை பின்வருமாறு செலுத்தத் தீர்மானிப்பதற்கு பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு அமைப/21/0362/330/022 மற்றும் 2021.03.08 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதனாலும்:—

(அ) காணாமற் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் தவிசாளருக்கு மாதாந்தக் கொடுப்பனவாக தற்போது பெற்றுக் கொடுக்கப்படுகின்ற எரிபொருள் மற்றும் தொலைபேசி கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக ரூபா 100,000/- இலிருந்து ரூபா 135,000/- ஆக அதிகரித்துச் செலுத்துவதற்கும்;

(ஆ) தவிசாளரின் உபயோகத்திற்கு உத்தியோகபூர்வ வாகனமொன்று பெற்றுக் கொடுக்கப்படாத சந்தர்ப்பங்களில் PED 1/2015(i) ஆம் இலக்க பொதுத் தொழில்முயற்சிகள் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தவிசாளரின் சொந்த வாகனத்தை கடமைகளுக்குப் பயன்படுத்துவதற்காக ரூபா 50,000/- ஆன மாதாந்தக் கொடுப்பனவைச் செலுத்துவதற்கும்; மற்றும்

(இ) காணாமற் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் உறுப்பினர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவை தற்போது பெற்றுக் கொடுக்கப்படுகின்ற எரிபொருள் மற்றும் தொலைபேசி கொடுப்பனவுக்கு மேலதிகமாக ரூபா 75,000/- முதல் ரூபா 90,000/- ஆக அதிகரித்துச் செலுத்துதல்.

இதற்கமைய, 2016 இன் 14 ஆம் இலக்க காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (தாபித்தலும், நிருவகித்தலும் மற்றும் பணிகளை நிறைவேற்றுதலும்) சட்டத்தின் 20 ஆம் பிரிவுக்கு அமைய காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் தவிசாளர் உள்ளிட்ட உறுப்பினர்களுக்கு அரசாங்க திரட்டிய நிதியத்திற்கு பொறுப்பிக்கப்படுமாறு மேலே குறிப்பிடப்பட்டுள்ள மாதாந்த சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகளைச் செலுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**11. ஒத்திவைப்பு (பொலிஸ் உத்தியோகத்தர்களின் ஒழுக்கம் மற்றும் நடத்தை):** “இப்பாராளுமன்றம் இப்பொழுது ஒத்திவைக்கப்படுமாக” என நெடுஞ்சாலைகள் அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை எடுத்தியம்பப்பெற்று விவாதிக்கப்பட்டது.

“கௌரவ இசுரு தொடன்கொட தலைமை தாங்குவாராக” என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 4.50 மணிக்கு கௌரவ இசுரு தொடன்கொட தலைமை தாங்கினார்.)

அவ்வேளை நேரம் பி.ப. 5.30 மணிக்கு மேலாகிவிடவே பி.ப. 5.45 மணிக்கு தலைமை தாங்கும் உறுப்பினர் இன்றைய தின சபைத் தீர்மானத்திற்கிணங்க பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைத்தார்.

அதன்படி பாராளுமன்றம், 2021 யூலை 07 ஆம் திகதி புதன்கிழமை மு.ப. 10.00 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.